சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **153 / 2016**

பெயர்: தேவதாஸ் பி.வா.சா. 3 தேதி **18.03.2025**

ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் தற்பொழுது மளிகை கடையில் வேலை பார்த்து வருகிறேன். நான் அடிக்கடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்வேன் என்றால் இல்லை. நான் முதல் விசாரணை சொன்னதற்கு பின்னிட்டும் டவுன் கால் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள நபர்கள் சொல்லும் வேலையை செய்பவர் என்றால் சரியல்ல. அதை மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள நபர்களை விசாரித்தால் தெரியும் என்றால் சரியல்ல. நான் கடந்த மார்ச் 12 ம் தேதி திருச்சிராப்பள்ளி டவுன் கால் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்ததேன் என்றாலும் அது அங்குள்ள சி.சி.டி-யில் பதிவாகியுள்ளது என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் பதிவு செய்த வாக்குமூலத்தில் நான் வளையல் வியாபாரம் செய்தவதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எத்தனை நபர்களுக்கு சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் நான் யாருக்கும் கையெழுத்து செய்தது கிடையாது. நான் 2019ம் ஆண்டு சிந்தாமணியில் உள்ள பூசாரி தெருவில் அன்று முதல் இன்று வரை வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன்.

2. பாப்பம்மாள் என்பவரை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றா்ல் அவர் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகள் வரை தெரியும். மேற்படி அவர் எப்பொழுது இறந்துபோனார் என்கின்ற விவரம் எனக்கு தெரியாது. கடைசியாக நான் பாப்பம்மாளை எப்பொழுது பார்த்தேன் என்றால் 2019 ஆண்டு பார்த்தேன். மேற்படி பாப்பம்மாள் 2019ம் ஆண்டு ஈரோட்டில் இருந்தார் என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பாப்பம்மாள் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டு கண் பார்வை பாதிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கோபால் (நான்காவது பிரதிவாதி) என்பவருடன் தொடர்பில் உள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கோபாலை எனக்கு யார் என்று தெரியாது. நான் அழைப்பாணையை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு சாட்சியம் அளிப்பதற்காக நான்காவது பிரதிவாதியையே அல்லது அவரது வழக்கறிஞரையோ சந்தித்தேனா என்றால் இல்லை. என்னுடைய திருமண தேதி, மாதம் ஞாபகம் இல்லை. அழைப்பாணையில் எந்த சொத்திற்காக சாட்சியம் அளிக்கவேண்டும் என குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் ஆவணங்கள் குறித்தோ அல்லது சொத்துக்கள் குறித்தோ எதுவும் தெரிந்து கொள்ளாமல் தான் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால்

சரிதான். நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தரகராக செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ளலாமா என்றால் மேற்கொள்ளலாம். கோபால் என்பவர் கேட்டுக்கொண்டதற்காக மோசடியாக ஏற்படுத்தப்பட்ட உயில் ஆவணத்தில் பாப்பம்மாள் என்பவரை யார் என்று தெரியாதா போது அதில் சாட்சி கையொப்பம் இட்டதாக சாட்சியம் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.